


29. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- தேசிய காவல்துறை தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று பங்கேற்றுள்ளார்.
- நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரை முன்னிட்டு அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு நாளை அழைப்பு விடுத்துள்ளது.
- தென்மேற்கு வங்ககடலில் நிலவும் டிட்வா புயல் வேதாரண்யத்திற்கு தென்கிழக்கே 140 கிலோ மீட்டர் தொலைவில் தற்போது மையம் கொண்டுள்ளது.
- புயலை எதிர்கொள்ள அரசு தயார்நிலையில் உள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. K. K. S. S. R. ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.
- சையது மோடி சர்வதேச பேட்மிட்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் அரையிறுதியில் கிடாம்பி ஸ்ரீகாந்த் - மிதுன் மஞ்சுநாத்தை இன்று எதிர்கொள்கிறார்.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

சட்டீஸ்கட் மாநிலம் ராய்பூரில் தேசிய காவல்துறை தலைவர்கள் மாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி தற்போது பங்கேற்றுள்ளார்.

உள்நாட்டு பாதுகாப்பு, நக்சல் தீவிரவாதம், பேரிடர் மேலாண்மை, தடய அறிவியலில், செயற்கை நுண்ணறிவு, மகளிர் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

3 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டின் ஒருபகுதியாக சிறப்பாக செயலாற்றிய காவல்துறை அதிகாரிகளுக்கு குடியரசு தலைவர் காவல் பதக்கங்களை பிரதமர் வழங்குகிறார்.

***********

மன் கி பாத்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 128-வது முறையாக பிரதமர் நாளைகாலை 11 மணிக்கு உரையாற்றுகிறார்.

தூர்தர்ஷன், வானொலி நிலையங்கள், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசைகள் உள்ளிட்டவற்றில் பிரதமரின் உரை நேரடியாகவும், தொடர்ந்து 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கமும் இடம்பெறும்

***********

அனைத்து கட்சி கூட்டம்

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நாளை மறுநாள் தொடங்க உள்ள நிலையில் நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

புதுதில்லியில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண்ரிஜிஜூ தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் இரு அவைகளையும் சுமூகமாக நடத்துவதற்கான வழிமுறைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்படும்.

வரும் ஒன்றாம் தேதிதொடங்கி 19ஆம் தேதிவரை நடைபெறும் இக்கூட்டத்தொடரில் பல்வேறு முக்கிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளன.

குளிர்கால கூட்டத்தொடரை ஆக்கப்பூர்வமாக கொண்டு செல்ல மத்திய அரசு விரும்புவதாகவும் நாடாளுமன்ற மாண்புகளுக்கு இணங்க எதிர்கட்சிகள் இதற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் திரு.கிரண் ரிஜிஜூ கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையே திமுக தலைவரும, முதலமைச்சருமான திரு.மு.க.ஸ்டாலின் தலைமையில் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாடுகள் குறித்து கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது.

நெல் கொள்முதல் ஈரபதத்தை 22 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்,

கோவை, மதுரை விமான நிலைய விரிவாக்கம்,

மதுரை பன்னாட்டு விமான நிலைய திட்டத்திற்கு அனுமதி தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தும் 12 தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டன.

***********

கடல்சார்

சர்வதேச கடல்சார் அமைப்பின் குழுமத்திற்கு இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

லண்டனில் 169 நாடுகள் பங்கேற்ற இதன் 34ஆவது அமர்வில் அதிகபட்சமாக 154 வாக்குகளுடன் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கடல்சார் வர்த்தகத்தில் அதிக பங்களிப்பு மற்றும் பரஸ்பர நலனை உறுதி செய்யும் 10 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதே இதற்கு காரணமாகும்.

***********

எல். முருகன்

திரைப்படத்துறையில் மகளிர் ஆளுமை மற்றும் பங்களிப்பு அதிகரித்து வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

கோவாவில் 56ஆவது சர்வதேச திரைப்பட நிறைவு விழாவில் உரையாற்றிய அவர், இவ்விழா திரைப்பட துறையில், இந்தியா உலக நாடுகளுக்கிடையேயான இணைப்பு பாலமாக திகழ்வதாக கூறினார்.

***********

சித்தராமய்யா

கர்நாடக மாநிலத்தில் தலைமைத்துவம் சார்ந்த அரசியல் நெருக்கடிக்கு மத்தியில் பெங்களுருவில் முதலமைச்சர் திரு.சித்தராமய்யா மற்றும் துணை முதலமைச்சர் திரு.D. K. சிவகுமார் பங்கேற்ற கூட்டம் இன்று நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் கூட்டாக பேசிய இருவரும் கட்சி தலைமையின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப இருவரும் செயல்பட போவதாகவும், எவ்வித கருத்து வேறுபாடுகளும் இல்லை என்றும் தெளிவுபடுத்தினர்.

திரு. சித்தராமைய்யா இரண்டரை ஆண்டுகள் முதலமைச்சர் பதவியை நிறைவு செய்துள்ள நிலையில் திரு. D. K. சிவகுமார் முதலமைச்சர் பதவியை கோருவதாக வந்த செய்திகளை தொடர்ந்து இருவரும் கூட்டாக செய்தியாளர்களிடம் இன்று பேசியிருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

***********

டிட்வா

தென்மேற்கு வங்ககடலில் நிலவும் டிட்வா புயல் வேதாரண்யத்திற்கு தென்கிழக்கே 140 கிலோ மீட்டர் தொலைவிலும்,

சென்னைக்கு தெற்கே 380 கிலோ மீட்டர் தொலைவிலும்,

காரைக்காலுக்கு தென்கிழக்கே 170 கிலோ மீட்டர் தொலைவிலும், தற்போது மையம் கொண்டுள்ளது.

இது இன்று நள்ளிரவு புதுச்சேரி கடல் பகுதியிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவில் நிலவக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

***********

ஜெய்சங்கர் - இலங்கை

டிட்வா புயலால் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கைக்கு 27 டன் நிவாரண பொருட்கள் உள்ளிட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஆபரேசன் சாகர்பந்து திட்டத்தின்கீழ் அத்தியாவசிய பொருட்கள், மருந்துபொருட்கள் உள்ளிட்டவை அங்கு அனுப்பபட்டுள்ளதாகவும், தேசிய பேரிடர் மீட்பு அதரடி படை குழுவினர் அங்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

***********

K. K. S. S. R. ராமசந்திரன்

டிட்வா புயலை எதிர்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாக மாநில பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. K. K. S. S. R. ராமசந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை எழிலகத்தில் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், டெல்டா மாவட்டங்களில் பேரிடர் மீட்புகுழுவினர் தயார்நிலையில் உள்ளதாக கூறினார்.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை மயிலாடுதுறை கடலூர் மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் காணொலி மூலம் ஆலோசனை மேற்கொண்ட அமைச்சர், தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களை பாதுகாப்பான இடங்களில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

வாய்ஸ்

இதனிடையே புயல் சீரமைப்பு பணிகளுக்காக குஜராத் மாநிலம் வதோதராவிலிருந்து 10 தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் இன்றுமாலை சென்னை வர உள்ளனர்.

***********

செம்பரம்பாக்கம்

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரியான செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் மட்டத்தை 21 அடியாக தொடர்ந்து பராமரிக்கும் நிலையில் அணையிலிருந்து தற்போது ஆயிரத்து 200 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

எனவே இதற்குட்டபட்ட சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர், திருமுடிவாக்கம், வழுதியம்மேடு, திருநீர்மலை, அடையாறு ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

***********

மழை மாவட்டங்கள்

இந்நிலையில் தஞ்சை மாவட்டம் கும்பகோணம், திருவையாறு பட்டுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அதிகாலைமுதல் மழை பெய்துவரும் நிலையில் கடலோர பகுதிகளான அதிராம்பட்டினம், ஏரிபுறக்கரைகோட்டம் உள்ளிட்ட பகுதிகளில் மீனவர்கள் படகுகளை பாதுகாப்பாக நிறுத்திவைத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

நாகை மாவட்டம் கோடியக்கரை வனப்பகுதியில் தொடர் கன மழை காரணமாக வனவிலங்குகள் மேடான பகுதிகளை நோக்கி நகர்வதால் சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம், கல்வராயன்மலை, அனுமநந்தல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் தொடர் மழை காரணமாக நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன.

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக விவசாய நிலங்கள் மற்றும் வீடுகளில் பாதிப்பு ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள கிராம நிர்வாக அலுவலருக்கு தகவல் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் தொடர் கன மழை பெய்துவரும் நிலையில் நிலைமையை சமாளிக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் அறிவுறுத்தியுள்ளார்.

***********

இருவரி

சிவகங்கை மாவட்டத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் பயன்படுத்துவதில் முன்னோடியாக விளங்கும் கல்வி நிறுவனங்கள் அரசின் மஞ்சப்பை விருது பெற விண்ணப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பொற்கொடி கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈரோடு சத்தியமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளில் மலர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலையில் பனிப்பொழிவு மற்றும் முகூர்த்த நாட்களை முன்னிட்டு மல்லிகைப் பூ கிலோ 6 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதால் பூ வியாபாரிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

***********

பேட்மிட்டன்

லக்னோவில் நடைபெறும் சையது மோடி சர்வதேச பேட்மிட்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் அரையிறுதியில் கிடாம்பி ஸ்ரீகாந்த் - மிதுன் மஞ்சுநாத்தை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் Unnati Hooda - துருக்கியின் Neslihan- உடன் இன்று மோதுகிறார்.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது